முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் நீட்சியாக தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்திய அகாதமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்ற 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உ உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் மகனும், Black BT நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான சதீஷ் தாயன்பன் சந்தித்து, கணிணியின் மூலம் இசை உருவாக்கம் செய்பவர்களுக்கு ஒலியினை கட்டுப்படுத்தும் வகையில் தான் தயாரித்த உலகின் முதல் Smart Pedal Black BT SusEx கருவியினை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் Black BT நிறுவனத்தின் பங்குதாரர்கள் ரமேஷ், திரு. விஸ்வநாதன், மயூர், வடிவமைப்பாளர் ரவி ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்தில், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி சந்தித்து, தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் 2023–24ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 19 கோடியே 49 இலட்சம் ரூபாயில், இடைக்கால பங்கு ஈவுத் தொகையான 7 கோடியே 60 இலட்சம் ரூபாய் 21.2.2024 அன்று வழங்கப்பட்ட நிலையில், தற்போது மீதமுள்ள பங்கு ஈவுத் தொகையான 11 கோடியே 89 இலட்சத்து 1 ஆயிரத்து 744 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் நிருவாக இயக்குநர் மற்றும் தலைவர் (மு.கூ.பொ.) திருமதி வே. கருணப்ரியா ஆகியோர் உள்ளனர்.

த.ஜெயகுமார் தலைமை! டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழா!

இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – மேயர் வசந்தகுமாரி – காமராஜ் – வே.கருணாநிதி பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஜன. 14- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் இன்று (14.1.2025 - செவ்வாய்) காலை 9.00 மணிக்கு அனகாபுத்தூர் கழக அலுவலகத்தில் தொடங்கி 5 இடங்களில் கழக கொடியேற்று விழா, அதைத் தொடர்ந்து குளக்கரை தெருவில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெறுகிறது.

விழாவில் கழகப் பொருளாளர், நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சி புரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்த குமாரி துணை மேயர் கோ.காமராஜ் மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவில் மாநகர துணைச் செயலாளர் இரா. நரேஷ் கண்ணா - மாவட்ட கழக பிரதிநிதி எஸ்.கே.நெப்போலியன், பம்மல் வடக்கு பகுதி அவைத் தலைவர் கே. சந்திரன், துணைச் செயலாளர்கள் மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, பொருளாளர் ச.பிரபு, மாநகரப் பிரதிநிதிகள் சி.பார்த்தசாரதி, க. சுந்தரமூர்த்தி, இரா.குமரேசன், இரா.பாபுஜி, மு.நித்தியானந்தம், வட்டக் கழக செயலாளர் ப.அன்பழகன், க. மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ. பாலாஜி, டி.எம்.ஜோசப், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ, விஜய குமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெய குமார், சித்ரா தேவி முரளிதரன் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தைப்பொங்கல் திருநாள் தமிழர்களின் வாழ்வோடு இணைந்த திருநாள் - அதை மகிழ்ச்சி பொங்கிட கொண்டாடிட அனைவரும் அணி திரண்டு வரவேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் நிகழ்ச்சி ஏற்பாடு!

எழும்பூர் 99 வது வட்டத்தில் 500 பேருக்கு உணவு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை, ஜன.14- சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி, 99வது வட்டக் கழகம் சார்பில் தை 1 தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழாவையொட்டி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கல் நிகழ்ச்சி இன்று (14.01.2025 செவ்வாய்) காலை 8 மணியளவில் புரசை வாக்கம், பொன்னன் தெருவில் நடை பெறுகிறது.

இவ்விழாவில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு பொது மக்களுக்கு அறு சுவை உணவை வழங்குகிறார்.

வட்டச் செயலாளர் ஆர். எம்.ரங்கநாதன் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் கழக உயர் நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., கே.எஸ்.ரவிச்சந்திரன், சொ. வேலு, கோ.மணி, புனிதவதி எத்திராசன், பரிதி இளம் சுருதி, ஜி.தாமோதரன், பி.சி. சம்பத்குமார், டி. செபாஸ்டின், வி.ரவி, ஏ.அஜித், சரவணன், இ.எம்.ராஜன், எம்.ராஜ், ஜெ.பானு, பி.புஷ்பலதா, கே.ஆர்.முரளி, பி.வரதராஜன், எம்.ரா. முரளி, கோமளா, ஆர்.எஸ்.வெங்கடேசன், ஏ.சுகுமார், என்.சீனிவாசன், பி.சிவா, ஆர். மாது, எஸ்.மோகன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்று சிறப்பிக்கும்படி வட்டக் கழகச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பி.டி.பாண்டிச்செல்வம் வரவேற்புரை! வி.ஜி.சந்தோசம் தலைமை!

நேசம் மனிதவள மேம்பாட்டு மையம் சார்பில் தமிழர் திருநாள் விழா!

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பரிசுகள் வழங்கி சிறப்புரை!

சென்னை, ஜன.14- நேசம் மனித வள மேம்பாட்டு மையம் சார்பில் தமிழர் திருநாள் விழா மற்றும் தங்க மங்கை கேரம் காசிமா, கராத்தே நிவேதா, ராமகிருஷ்ணன் ஆகியோருக்கு பாராட்டு விழா நடைபெறுகிறது. 16.1.2025 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தொடங்குகிறது.

இவ்விழாவில் பாரம்பரிய மான கலை நிகழ்ச்சிகளும், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் தொடர்ந்து நடைபெற இருக்கிறது. மேலும் திருக்குறள் ஒப்பித்தல் போட்டி மற்றும் திருக்குறள் வினாடி - வினா போட்டியும் நடைபெறுகிறது.

தொடர்ந்து போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று மாலை ஆறு மணி அளவில் இப்போட்டியில் பங்கேற்று வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட இருக்கிறார்கள்.

கழக வர்த்தக அணி இணை செயலாளர் மற்றும் நேசம் மனித வள மேம்பாட்டு மையம் ஒருங்கிணைப்பாளர் பி.டி.பாண்டி செல்வம் வரவேற்புரையாற்றுகிறார். சிவாலியர் டாக்டர் வி. ஜி .சந்தோஷம் தலைமையில் மனிதநேயர் ஜி.வரதராஜன், விவேக் சிவசாமி, என். சிவக்குமார், சேவா பாலம் இருளப்பன், எம். மதியழகன், லயன் தியாகராஜன், லயன் எம்.ஆர். சதீஷ், லிவோ சுரேஷ், லயன் டீன் தயாளன், ஆ.ர் ரமேஷ், சிலம்பம் சண்முகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் பரிசுகள் வழங்கி பாராட்டுரை வழங்குவார்கள்.

சமூக சிந்தனையாளர் பாரதி கிருஷ்ணகுமார் சிகரங்களை நோக்கி வள்ளுவம் எனும் தலைப்பில் உரையாற்றுவார்கள். திருக்குறள் தேனி நல்லாசிரியர் ஜெயம் கொண்டானுக்கு திருவள்ளுவர் விருது வழங்கப்படுகிறது. மேலும் இவ்விழாவில் சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியும் நடைபெறும்.

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்ட தி.மு.க. சார்பில் வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தமிழ் புத்தாண்டு மற்றும் சமத்துவப் பொங்கல் விழா முன்னிட்டு வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பொதுமக்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர், கழக மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் நா.எழிலன் நாகநாதன், பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ் ஆகியோர் பொங்கல் தொகுப்பினை வழங்கினார்கள். இதில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை இராயப்பேட்டையில் தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் "இன்பம் பொங்கும் தமிழ்நாடு என பொங்கல் திருநாளை வரவேற்கும் விதமாக டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் அடையாறு ஷபீல் கான் மற்றும் என்.பி.எம்.சேக் அப்துல்லா முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, சென்னை வடக்கு மாவட்டக் கழக அமைப்பாளர் எம்.ஆர்.டி.அப்துல் ரகுமான், திருவள்ளூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் ஷாஜஹான், திருவள்ளூர் மேற்கு மாவட்ட அமைப்பாளர் சித்திக் அலி, சென்னை தென்மேற்கு மாவட்டத் தலைவர் சேக் முகமது, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தலைவர் இராபர்ட் (எ) இராஜதுரை, சென்னை வடக்கு மாவட்ட தலைவர் சாகுல் மீரான் மற்றும் துணை அமைப்பாளர்கள். டி.அசோக்ராஜ், இரத்தினகுமார், மகிமைதாஸ், உ.அனீபா, அலெக்ஸ், உத்திரியம், ஜான்சன், பாபு சையத், அப்துல் ரகுமான், கம்ருதீன், ஜான்பிரிட்டோ, திருவள்ளூர் மேற்கு மாவட்ட தலைவர் திரு.அயூப் அலி, முகமது அஸ்லாம், பிரகாஷ், பெருமாள், பன்னீர்செல்வம், பு.அன்பு, பாருக், மேகநாதன், டாக்டர்.மீரான் உசேன், முகமது அசாருதீன், முஃபதால் மற்றும் வேளச்சேரி பகுதி அமைப்பாளர் டாக்டர்.எஸ்.நஜீம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று விழாவினை சிறப்பித்தனர்.

மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில்

திருவொற்றியூர் கிழக்கில் பொங்கல் விழா - நல உதவிகள்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் – கலாநிதி வீராசாமி – கே.பி.சங்கர் வழங்குகின்றனர்!

சென்னை, ஜன. 14- சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் தை திருநாள் பொங்கல் விழா & தூய்மைப் பணியாளர் களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கழக கொடி ஏற்றி இனிப்பு & நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (14.1.2025) காலை 9 மணிக்கு சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக பணிமனையில் நடைபெற உள்ளது.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். ஆகையால் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பொதுகுழு உறுப்பினர்கள் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில்!கழக மாநில மீனவர் அணி சார்பில்

கே.வி.கே.குப்பத்தில் சமத்துவப் பொங்கல் விழா- நல உதவிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்– மாதவரம் எஸ்.சுதர்சனம்– கலாநிதி வீராசாமி – தி.மு.தனியரசு பங்கேற்பு!

சென்னை, ஜன.14- தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர், இளந்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் விழா மற்றும் மாற்றுத் திறனாளி சகோதர, சகோதரிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா கழக மாநில மீனவரணி சார்பில் மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் கே.வி.கே.குப்பத்தில் நாளை (15.01.2025) காலை 9.30 மணியளவில் நடைபெற உள்ளது.

முன்னதாக அருள்மிகு ஸ்ரீ படவேட்டம்மன் ஆலயம் அருகில் பெண்கள் பொங்கல் வைத்து சூரியனை வணங்கி கும்மியடித்து பாரம்பரிய முறைப்படி சமத்துவ பொங்கலை கொண்டாட உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும், மாவட்ட அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, பகுதி கழக செயலாளர்கள் தி.மு.தனியரசு, வை.ம. அருள்தாசன், ஏ.வி.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே கழக மாநில மாவட்ட - மீனவரணி நிர்வாகிகள், மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சமத்துவப் பொங்கலை சிறப்பிக்குமாறு மாநில மீனவரணி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக 5 வது வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் நன்றி கூறுகிறார்.

இரா.கிரிராஜன் - ஜி.துக்காராம் - எஸ்.நந்தகோபால் - டி.சுந்தரம் - செ.கஜபதி பங்கேற்பு!

மாதவரம் 30 (அ) வட்டத்தில் சமத்துவ பொங்கல் விழா!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்குகிறார்!

சென்னை, ஜன.14- சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்குப் பகுதி 30(அ) வட்டக் கழகம் சார்பில், தமிழ்ப்புத்தாண்டு சமத்துவ பொங்கல் விழா மற்றும் திருவள்ளுவர் பிறந்தநாள் விழா நாளை (15.1.2025- புதன்கிழமை) காலை 10 மணிக்கு, செல்வலட்சுமி திருமண மண்டபம், விநாயகபுரத்தில் நடைபெறுகின்றது. வட்டக் கழகச் செயலாளர் டி.சுந்தரம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

நிகழ்ச்சிக்கு செ.கஜபதி தலைமை வகிக்கிறார். இ. ராமன், எஸ்.பி. கண்ணன், சி.பரமேஸ்வரி, ஹப்பிப் ரெஹ்மான், பி.எஸ்.என்.எல். தயாளன், கே.ராஜேந்திரன், ஏ.வி.முருகன், எம். சீனிவாசன், பி.எஸ்.என்.எல். குமார், வெங்கட்ராமன், கருணாநிதி, காஞ்சி சண்முகம், பி.வி.ராஜு, செண்பகராஜ், டி.வி.எஸ்.கோபி, சக்கரபாணி, சி.உமாமகேஸ்வரி, டாக்டர் ஜி. பார்த்தசாரதி, எஸ்.மாதவி, எஸ்.நந்தினி, பி. சுரேஷ், ஆர்.சி.ஜெய்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இரா.கிரிராஜன் எம்.பி., ஜி.துக்காராம், எஸ்.நந்தகோபால், திருமலை ஜி.துரைசாமி, புத்தகரம் இ.ஏழுமலை, எம். சரவணன், மோ.குணசுந்தரி, மு.குட்டி மோகன், துரை ஸ்ரீராமுலு, டி.ரமேஷ்குமார், குருஜயா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பகுதி பிரதிநிதி எஸ்.என். ராஜி, வி.தினகரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தைப் பொங்கலை முன்னிட்டு, எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டு, ஹாரிங்டன் சாலை, மாநகராட்சி சமூக நலக் கூடத்தில் நடந்த பொங்கல் பரிசு வழங்கும் விழாவில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப்பைச் சேர்ந்த 500 விளையாட்டு வீரர்களுக்கு டிஷர்ட், டிராக் பேண்ட், நாட்காட்டி உள்ளிட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கினார்.

மலேசியா தளபதி பேரவை சார்பில்

தமிழர் திருநாள் சமத்துவ பொங்கல் விழா!

ஜே.சிவானந்தம் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஜன.14- மலேசியா தளபதி பேரவை சார்பாக சமத்துவ பொங்கல் விழா திராவிட நாயகர் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் இளம் தலைவர் துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மலேசியா தளபதி பேரவை செயலாளர் ஹச்.எம்.ஜெய்னுதீன் வழிகாட்டுதலின்படி மலேசியா தளபதி பேரவை பொருளாளர் ஜே.சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மகளிர் அணியினர் பவித்ரா, கனிமொழி, கதீஜா பிவி, சபியத் நிஷா, நசீமா பேகம், பார்வதி விஜயா, தனுஷா ஹசீனா, பர்வீன், நஸ்ரின், ஜாஸ்மின் பர்வீன், காதர் மீரான், அயூப் கான், செல்வி, பாலமுருகன், சுந்தர பாண்டியன், சமூக ஆர்வலர் தட்சணாமூர்த்தி, அருள்தாஸ், ஜான் பீட்டர், முத்து, மணிகண்டன், அப்துல் தம்மம்பட்டி நஜ்மா, வாலி கண்டபுரம் மன்சூர் அலி, மணல்மேடு அல் அமீன், ஏ.சாதிக் பாட்சா, டி.வி.ஒய். எஸ்.வினோத், மேல திருமலைராஜபுரம் பொதுக்குழு உறுப்பினர் க. புருஷோத்தமன், தினேஷ்குமார், அய்யனார், தொழிலதிபர் சலீமுதீன், அசாருதீன், நாகேந்திரன், தயாளன், மூர்த்தி, அந்தோணிசாமி, வில்பட், கரிகாலன், அமானுல்லா, தொழிலதிபர் அன்சாரி, பிரபு, கலியமூர்த்தி, சபி, ஹக்கீம் அலி, தண்டபாணி, ஐஸ் அகமதுல்லா, ஆசிப் அலி சேட், மற்றும் அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான நடைபெற்ற மாபெரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியினை சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் பரிசு வழங்கினார். இந்நிகழ்வில் விப்ரோ நாராயணன், அருள்தேவநேசன், கே.கபிலன் எம்.சி., ஆர்.டி.குமார், இ.பாஸ்கர், ஆர்.டி.சுரேந்திரன், திராவிட மணி, இளங்கோவன், எஸ்.அன்பு, ஆர்.எம்.பி.குமார், இ.சுகுமார், ஆர்.கே.சுரேஷ், அப்துல்சமது, வடிவேல், நாகராஜ், வி.மதிவாணன், ஜி.நாகராஜ் வழக்கறிஞர் ஆர்.டி.சுதாகர், ஏழுமலை, ஆம்.பிரேம்குமார், து.சாந்தகுமார், அருள்ராஜ், முனுசாமி, ஜேம்ஸ், டி.ராமகமல், சீனிவாசன், சங்கர், மு.ஈஸ்வரன், ஹாம் கார்த்திக், கருப்பு`ரீதர், வாசு, அறிவுநிதி, பிராசாத், கார்த்திக் ஜோதி, நவின், கிருஷ்ணகுமார், சிக்கந்தர், ரவீந்தர், பிரபாகரன், நிர்மல்ராஜ், பார்த்திபன், ரமணன், அரிபாபு, கே.யுவராஜ், டேவிட், சோழவரம் எம்.எஸ்.மணிகண்டன், ஐயப்பன், ம.குறளரசன், எர்ணாவூர் சிவசூரியா, எஸ். ஹரிஷ், ஆர்.ரூபேஷ், ஜி.ஹரி, டி.ஜென்னிஸ், எம்.கவின், ஆர்.மோகன், சி.பால்ராஜ், வி.சஞ்ஜெய், சி.ஜெகன் மற்றும் கழக உடன் பிறப்புக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.